அம்மையாருக்கு அனுமதிச் சீட்டு வழங்கியவர் திரு. தருமலிங்கம் என்கிற மாண்புமிகு உறுப்பினர் ஆவார். அவர் யாரோ கேட்டார், கொடுத்தேன் என்ற அளவில் கொடுத்திருக்கிறாரே தவிர, தெரிந்து கொடுத்ததாகத் தெரியவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

(ஆ) உரிமைக் குழுவுக்கு அனுப்பாமல் அவை உரிமையை மீறிய பிரச்சனைமீது, பேரவைத் தலைவரே முடிவு எடுக்கலாமா என்பது குறித்து.

(இ) பேரவை நடவடிக்கைக் குறிப்புகளை உறுப்பினர்கள் பார்வைக்கு வைப்பது குறித்து.

THIRU K. T. K. THANGAMANI : On yesterday's proceedings, I want certain clarifications. If we want to raise questions about what had happened yesterday, are we allowed to go through the proceedings or not? Of course, they may be uncorrected copies. In the Lok Sabha the uncorrected copies of the proceedings are kept in the Library for the benefit of Members the next day. When I approached the Office to-day to go through the proceedings, I was told that it will be made available only after seven days. Yesterday, the Hon. Speaker was pleased to give a direction with regard to a privilege issue and arising out of that the Hon. Speaker was pleased to rule that he can bring a Privilege Motion *suo moto* and dispose it of. That is how I understand the issue. I do not have the proceedings with me. The Hon. Speaker said that he can invoke rule 192: 'Notwithstanding anything contained in these rules, the Speaker may *suo moto* refer any question of privilege to the Committee of Privileges for examination, investigation or report.' My humble submission is this. If the Hon. Speaker reads the entire Chapter on 'Privilege', he will know that there is no such discretion. It is not left to the Hon. Speaker and he is not authorised to do so. The convention always is normally that the Hon. Speaker will not bring such an issue on his own accord but leave it to the Members to raise it on the floor of the House. Then the matter is raised by some Member. If there is a *prima facie* case, the

Hon. Speaker will ask the opinion of the House and then he may refer the matter to the Committee of Privileges or to the entire House. If the Hon. Speaker feels that the House is not with him and if he holds that there is a *prima facie* case, then alone rule 192 authorises him to refer the matter on his own to the Committee of Privileges. That is the procedure to be adopted. My humble submission is what the Hon. Speaker has been pleased to rule yesterday was contra to what is contemplated under rules 183 to 192.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் இரண்டு கேள்விகளை எழுப்பியிருக்கிறார்கள். ஒன்று—உறுப்பினர்கள் பேசிய பேச்சைப் படிக்கவேண்டும் என்று சொன்னார்கள். உறுப்பினர்கள் இந்த அவையில் பேசுகின்ற பேச்சின் நகல் ஒன்றை அவரவர்களுக்கு மறு நாள் கொடுத்து, அதை அவர்கள் திருத்திக் கொடுப்பதற்கு ஒரு காலவரை கொடுக்கிறோம். அந்தக் காலவரைக்குள் அவர்கள் திருத்திக் கொடுத்துவிட்டால், திருத்திய பகுதியை எடுத்துக் கொள்ளுகிறோம். அந்தக் காலவரைக்குள் திருத்திக் கொடுக்கவில்லையென்றால், ரிபோர்ட்டர்கள் குறிப்பு எடுத்ததை அப்படியே அச்சுக்கு அனுப்புகிறோம்.

நடவடிக்கைக் குறிப்பின் நகலொன்றை நூலகத்தில் வைப்பதற்கு ஏழு நாட்கள் வரையறை வைத்திருக்கிறோம். அந்த ஏழு நாட்களுக்கு முன்பு கொடுப்பது முறையாக இருக்காது. இதற்கு முன்பு இப்படிப்பட்ட கருத்து இந்த அவையிலே எழுப்பப்பட்டு, ஏழு நாட்களுக்குப் பிறகுதான் நூல் நிலையத்தில் வைக்கப்படும் என்று தீர்ப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. அதைத்தான் இப்பொழுதும் நடைமுறையில் வைத்துக்கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

அடுத்து. ப்ரிவிலெஜைப் பொறுத்த வரையில் . .

திரு. கே. டி. கே. தங்கமணி: நேற்றைய ப்ரொஸீடிங்ஸை, அது அன்-கரெக்டட் ஆக இருந்தாலும், அதைப் பார்க்க எங்களுக்கு அனுமதி உண்டா? அப்படியானால், எத்தனை நாட்களுக்குப் பிறகு? ஏழு நாட்களுக்குப் பிறகுதான் பார்க்கலாம் என்றால், நேற்று

நடந்த விஷயத்தைப் பொறுத்த வரையில் மறுநாளே இந்த அவையில் கொண்டுவர எங்களுக்கு வாய்ப்பு இல்லாமல் போகிறது. ஆகவே, அன்-கரெக்டட் ஆக இருந்தாலும், மறு நாளே நூலகத்தில் பேரவை நடவடிக்கைக் குறிப்புகள் வைக்கப்பட வேண்டும் என்ற 'டைரக்டிவ்'வைத் தாங்கள் அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதுபோன்ற பிரச்சினை முன்பு எழுப்பப்பட்டு, இதற்கு 1967-ம் ஆண்டில் ஒரு தீர்ப்பு வழங்கப் பட்டிருக்கிறது.

"இரண்டு நாட்களுக்கு முன்பு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், சட்டசபை உறுப்பினர்கள் இங்கே பேசுகின்ற பேச்சுக் கள் நூல் நிலையத்திலே வைக்கப்படுவதில்லை என்று ஒரு ஒழுங்குப் பிரச்சினையைக் கொண்டு வந்தார்கள். என் கருத்தைப் பின்னால் கூறுகிறேன் என்றேன். அதைப்பற்றிக் கூற விரும்புகின்றேன். இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுகின்ற நேரத்தில் அவர் களுடைய பேச்சுக்கள் குறிப்பு எடுக்கப்பட்டு, பின்னர் விரிவாக்கம் செய்யப்படுகின்றன. உறுப்பினர்களுடைய பேச்சுக்கும் எடுக்கப் படுகின்ற குறிப்புக்கும் சில சமயம் மாறுபாடுகள் இருக்கலாம். அவற்றை அப்படியே நூல் நிலையத்தில் வைப்பதற்கில்லை. மாண்புமிகு உறுப்பினர் பேசிய பேச்சின் நகல் உறுப்பினருக்குக் கொடுக்கப்பட்டு, அவர்கள் திருத்தி அவர்களுடைய ஒப்புதலோடு வைக்கவேண்டுமென்ற காரணத்தால் இடையிலே சில நாட்கள் ஆகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். திருத்தப் பட்ட பேச்சுக்கள் நூல் நிலையத்தில் வைக்கப்படும் என்ற உறுதியைக் கூறுகிறேன்."

இப்படி ஏற்கெனவே ஒரு முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. ஏழு நாட்கள் என்றிருப்பதில் ஏதாவது குறைக்க முடியுமா என்பதைப் பார்த்து, அதை எவ்வளவு விரைவில் கொடுக்க முடியுமோ அவ்வளவு விரைவில் கொடுக்க வகை செய்கிறேன் என்பதைக் கூறிக் கொள்கிறேன்.

அடுத்து, ப்ரிவிலெஜைக் குறித்து என் முடிவை நான் நாளைக்குத் தெரிவிக்கின்றேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, பேரவைக் காவது 'ட்ராஃப்ட்'டைத் தர ஏற்பாடு செய்யப்படுமா? ஏழு நாட்கள் என்று சொல்வது மிகவும் தூரமாக இருக்கிறது. முக்கிய மான சில விஷயங்களில் யார் யார் என்னென்ன கருத்துக்கள் கூறி யிருக்கிருர்கள் என்று பார்வையிடுவதற்கு அனுமதிப்பது ஜனநாயக முறையில் முக்கியமான காரியமாக இருப்பதால், அதற்கு வேண்டிய ஏற்பாட்டைத் தாங்கள் தீர்ப்பு கூறுவதற்கு முன்னதாக ஏற்பாடு செய்யவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையில் அதை மேற் கோள் காட்டும் நேரத்தில் அந்த உறுப்பினர், அப்படிப் பேசவில்லை என்று மறுக்கக்கூடிய நிலைமை உண்டாகி, அதுவே ஒரு பிரச்சினைக் குரிய நிகழ்ச்சி ஆகிவிடும் என்ற காரணத்தால், அவ்வாறு கொடுப் பதற்கில்லை என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அடுத்து, திரு. பி. வெங்கடசாமி அவர்களுடைய தீர்மானத்தின் மீதும், திரு. கே. டி. கே. தங்கமணி அவர்களுடைய தீர்மானத்தின் மீதும் விவாதம் தொடரும். இப்பொழுது திரு. எல். கணேசன் அவர்கள் பேசலாம்.

(3) அமைச்சரவையின் மீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும் தீர்மானமும், அமைச்சரவையின் தனி ஒரு கொள்கையைக் கண்டிக்கும் தீர்மானமும்—தொடர்ச்சி.

* **திரு. எல். கணேசன் :** மாண்புமிகு மாமன்றத் தலைவர் அவர்களே, இங்கே டாக்டர் கலைஞர் அவர்களுடைய தலைமையில் அமைந்திருக்கும் அமைச்சரவை மீது நம்பிக்கை இல்லை என்று எதிர்த்தரப்பினரால் கொண்டு வரப்பட்ட தீர்மானத்தின் மீதும், அதே போல் கொண்டு வரப்பட்ட கண்டனத் தீர்மானத்தின் மீதும் அவை இரண்டையும் எதிர்த்து என்னுடைய கருத்துக்களைச் சொல்ல வாய்ப்புக் கொடுத்ததற்காக முதலில் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கு பிரச்சினைகளை எழுப்புகின்ற எதிர்த்தரப்பில் இருப்பவர் கள் எப்படியாவது ஆளும் தரப்பில் இருப்பவர்களுக்கு ஆத்திரத்தை ஏற்படுத்த வேண்டுமென்ற முறையில், எடுத்தேன், கவிழ்த்தேன் என்ற பாணியில், எரிச்சலூட்டத்தக்க வகையில்—